1970 மார்ச் 25]

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, விருதுநகரில் பள்ளிகளில் மதிய உணவுக்காகப் போடப்பட்ட அரிசி நிறுத்தப் பட்டதா? அந்தக் குறிப்பிட்ட மாதத்தில் இல்லாமல் போனாலும், அதற்கு முன்னாலாவது அல்லது பின்னாலாவது போடப்பட வில்லையா? ஆம் என்றால் என்ன காரணம்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவலின்படி ஆகஸ்ட் மாதத்தில் 75 குவிண்டால் அரிசி அந்த ஊராட்சிமன்றங்களுக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. மற்ற விவரம் என்னிடத்தில் தற்போது இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

பால்பொடி தயாரிப்பு

*543 வினா—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பால்பொடி (Milk Powder) தயார் செய்யும் தொழிற் சாலை ஒன்று மதுரை பால் பண்ணையில் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:

ஆம்.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, பால்பவுடர் தொழிற்சாலையை அமைக்கப்போவது சர்க்கார் துறையிலா அல்லது தனியார் துறையிலா? இதற்கான கெபாசிட்டி என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, சர்க்கார்தான் தொடங்க இருக்கிறது. இதற்கு மொத்தம் 21 லட்சம் ரூபாய் செலவாகும்.

Firing of pellets near Puduchattiram

*529 *Q.*—Thiru N. S. V. CHITHAN :
Thiru R. KARUPPIAH : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Deputy Inspector-General of Police, C.I.D., enquired into the firing of pellets near Puduchattiram about 29th October 1969; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:

(அ) ஆம்.

(இ) முயல் வேட்டையாடிப் பழக்கப்பட்ட அப்பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர், இந்த நிகழ்ச்சிக்குக் காரணமாயிருந்தார் என்று புலனாய்விலிருந்து தெரியவந்தது. அவர், ஒரு முயலைக் குறிவைத்துக் கொண்டிருந்தபோது, திருச்சிராப்பள்ளி செல்லும் 153 எண் விரைவு ரயில் வண்டி அவ்வழியைக் கடந்து சென்றது.